**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 15 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 03 ஆகஸ்ட் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,200,000 பெறுமதியான புளியங்கூடல் காணி இறுதிக்கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதும் அதற்கான சுவீகரிப்பு நடவடிக்கை முற்றுப்பெறாது கணக்குகளில் கொண்டுவரப்பட்டுள்ளமையினால் காணியின் பெறுமதி கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | காணி சுவீகரிப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |

**(ஆ) கணக்காய்வு சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 79,124 பெறுமதியான 02 கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் உரிய | உரிய உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | வேண்டும். | |

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊர்காவற்றுறை மீன் சந்தையின் பெறுமதியானது நிலையான சொத்தின் பதிவேட்டின் படி 633,600 காணப்படுகின்ற போதும் இறுதிக்கணக்குகளின் படி 3,133,600 ஆக காணப்படுகின்றது. இதனால் அவற்றுக்கிடையிலான வேறுபாடு ரூபா 2,500,600 இல் ஏற்பட்டுள்ளது. | கட்டடங்களின் பெறுமதி இறுதிக்கணக்குகளில் சேர்க்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தொடர்பாக, இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் - பிரிவு 126 (iii) (ஊ) | வருமானப் பரிசோதகரினால் 06 அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 06 அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக, நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் III இன் பிரிவு 32 | ஆதனவரி மதிப்பீடு மற்றும் ஆதனவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய நிதி நிருவாக விதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆதன மதிப்பீட்டு நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இலக்கம் 571 | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய பிடிபணம் ரூபா 153.587 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உரிய நிதி ஒழுங்கு விதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய மிகுதி பிடிபணம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் - 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 04 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யப்பட்ட வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | 04 வாகனங்கள் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவற்றிற்கு எரிபொருள் நுகர்வுப்பரீட்சிப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,565,468 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,191,680 ஆக அமைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| வாடகைகள் | 2,921,300 | - | 2,233,867 | 8,000 | 3,625 | - | 2,677,922 | 6,266 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 451,650 | - | 448,762 | - | 423,400 | - | 322,999 | - |
| ஏனைய வருமானம் | 44,502,876 | - | 37,565,500 | 74,450 | 43,778,938 | - | 9,112,957 | 6,418,520 |
| | **47,875,826** | - | **40,248,129** | **55,450** | **47,827,897** | - | **12,113,878** | **6,424,786** |

❖ பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 12,113,878 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 40,248,129 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 28,134,521 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் வருமானத்தினை பட்டியலிட சபை தவறியிருந்தது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

## (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் பிரதேச சபையினால் உபவிதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

## (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளுக்கிணங்க வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | சபையின் அனைத்து செயற்றிட்டங்களையும் உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## (இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 15 செயற்பாடுகளிற்கு கிரய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அச் செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | குறிப்பிட்ட செயற்பாடுகளை விரைவில் முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறிப்பிட்ட வேலைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய காரணங்களுக்காக கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. |

## (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (i) | 2018 ஆம் ஆண்டு திண்மக்கழிவகற்றல் செலவினமாக ரூபா 4,779,889 செலவு செய்யப்பட்ட போதிலும் | திண்மக்கழிவு அகற்றல்கள் முறையான வகையில் தரம் பிரிக்கப்பட்டு | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைகள் பிரதேச சபையினால் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சேகரிக்கப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும். | |
| (ii) | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படாது திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான பிரச்சனை ஏற்படுவதுடன் அளவுக்கு அதிகமாக குப்பை ஏற்றிச்செல்லும் வாகனங்களால் வீதி வழியே குப்பைகள் கொட்டி செல்லப்படுகின்றது. | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படவேண்டும். | சபையில் திண்மக்கழிவகற்றலிற்கு பயன்படுத்தும் மூடிய வாகனங்கள் இல்லை. |
| (iii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | எதிர்காலத்தில் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**(உ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கும் போது செயற்படுத்தப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 17,016,758 பிரதேச அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்தாது | சபையின் நிதியானது மக்களிடமிருந்து பெறப்பட்டிருந்ததனால் அந்நிதியாது பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். | நிலையான வைப்பில் ரூபா 20,843,957.58 உள்ள போதும் அதில் ரூபா 172,800.88 தவிர்ந்த ஏனையவை 2015 ம் ஆண்டுக்கு முன்னரே |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டுள்ளது. | | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையில் உள்ள 16 மயானங்களிற்கு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மயானவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 16 மயானங்களிற்கும் மயான வரி அறவிட சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | மயானங்கள் எல்லைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட பின்னர் மயான வரி அறவீடு செய்யப்படும். |
| (இ) | வீதவரி மதிப்பீடு பிரதேச சபையினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | ஆதன மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேச சபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை |
| (உ) | பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | பொது மக்கள் சேவை பட்டயத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் உரிய காலத்தில் பொது மக்களுக்கான சேவைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களினை உரிய முறையில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மட்டுமே சேவைகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 19 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களினை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 06 வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 04 வாகனங்கள் ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளதுடன் ஏனைய இரண்டு லான்மாஸ்ரர்களும் பதிவு செய்யப்படாததால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாமல் உள்ளது. |

#### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டுமொத்தம் ரூபா 50,070,600 பெறுமதியான 22 ஆதனங்கள் பிரதேச சபைக்கு பாராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள் பிரதேச சபைக்கு பாராதீனப்படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பாராதீனப்படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 22 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | சபையின் பெயருக்கு உரித்தான வாகனங்கள் உரிமை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |

#### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான தேவரதம் படகு 04 வருட காலமாக பயன்பாடின்றிக் காணப்படுகின்றது. | படகினை பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் ஏல விற்பனையும் விரைவுபடுத்த வேண்டும். | குறித்த படகு இதுவரை பதிவுசெய்யப்படாமல் உள்ளதனால் குறித்த படகினை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குரித்தான நவீன சந்தை கடைத்தொகுதியின் 03 கடைகள் கடந்த 10 வருடங்களாக பயன்பாடற்றுக் காணப்படுகின்றது. | நவீன சந்தை கடைத்தொகுதி வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடைத்தொகுதியில் வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.4.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகத்தினது வருடாந்த களஞ்சியக் கணக்கெடுப்பின் போது 27 பொருட்களுக்கான உண்மையான இருப்பு பெறுமதி மெய்மையாய்வு செய்து காட்டப்படாது கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த இருப்பு கணக்கெடுப்பு முறையாக மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | அன்பளிப்பு பொருட்களிற்கான பெறுமதிகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ஆ) | எழுவை தீவு பொது நூலகத்தின் 442 எண்ணிக்கையான ரூபா 46,198 பெறுமதியான தொலைந்த புத்தகங்கள் தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொலைந்த புத்தகங்கள் தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | தொலைந்த புத்தகங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் சபையினால் முன்னெடுக்கப்படுகின்றன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டின் மீண்டுவரும் செலவுகளான பயணச்செலவு, மூலதனச்செலவுகளை பழுதுபார்த்தல், மானியமும் உதவுதொகைகளும், ஓய்வூதியங்கள் என்பவை உண்மையான செலவிலிருந்து கூடுதலான வீதமானது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது. இதனால் ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |